போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

JANUARY 24, 1922.

நெ. 1.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் ௵ ஜனவரி ௴ 24௳. [விலை, 3 பை.

சென்னை கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின் ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னை சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகின்றன :—

BILL No. 1 OF 1922.

1922-ம் ௵த்து 1-வது மசோதா ஆக்ட்.

A BILL TO AMEND THE MADRAS REVENUE RECOVERY ACT II OF 1864.

(ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம் ௵த்து 2-வது ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

நிலத்தீர்வை வசூல் விஷயமாக ஏற்பட்டிருக்கும் அவசரமான சந்தர்ப்பத்தை உத்தேசித்து (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம் ௵த்து ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1. இந்த ஆக்டை, (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த (சிறிதுகாலத்துக்குத் திருத்துவதற்கான) 1922-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்டென்று சொல்லலாம் ; மேலும், இது - 1923-ம் ௵ ஜூன் ௴ 30௳ வரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

அர்த்தம்.—“ பிரதான ஆக்ட் ” என்பது - (ஸர்க்கார்) தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம் ௵த்து 2-வது ஆக்டென்று அர்த்தமாகும்.

2. பிரதான ஆக்டின் 9-வது. 22-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் - குறித்த யாதொரு விஸ்தீர்ணத்துக்குள் அசையும்பொருளை ஜப்திசெய்கிற யாதொரு உத்தியோகஸ்தருக்கு, விற்பனை விஷயத்தைத் தகுந்தபடி பிரசித்தப்படுத்துவதற்கு அவசியமென்று அவருக்குத் தோற்றக்கூடிய விதமாக பிரசித்தஞ்செய்வித்தபிறகு, அவரால் குறிப்பிடப்படக்கூடிய காலத்திலும் இடத்திலும்

ஜப்திசெய்யப்பட்ட சொத்தை விற்பதற்கு விளம்பரமூலமாய அதிகாரம் கொடுக்கலாம்; ஆனால், ஜப்திசெய்த காலமுதல் 24 மணி நேரத்துக்குள்ளாக அப்படிப்பட்ட விற்பனை நடக்கக்கூடாது. 1839-ம் வருஷத்து 7-வது ஆக்டின்படி விற்பனைசெய்ய அதிகாரம் கொடுத்திருக்கும் உத்தியோகஸ்தரைக்குறித்துப் பிரதான ஆக்டில் சொல்லியிருக்கும் இடங்களிலெல்லாம், அந்தக் குறிப்புகள் இந்தப் பிரிவின்படி விற்பனைசெய்ய அதிகாரம் கொடுத்திருக்கும் ஜப்தி உத்தியோகஸ்தரைப்பற்றிய குறிப்புகளாக எண்ணப்படும்.

3. பிரதான ஆக்டின் 27-வது பிரிவிலும் 36-வது பிரிவைச்சேர்ந்த 1-வது, 2-வது பகுதிகளிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் - ஜப்தி செய்திருப்பதைப்பற்றி டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் விளம்பரம பிரசுரிக்கவேண்டுமென்பதைப்பற்றிய நிபந்தனையை குறித்த எந்த விஸ்தீர்ணத்தின் விஷயத்திலாகிலும் அனுசரிக்காமல் விட்டுவிடலாமென்று விளம்பரமூலமாய்க் கட்டளையிடுவதுமல்லாமல், அசையாப்பொருளை விற்பனைசெய்ய அதிகாரம் கொடுத்திருக்கும் உத்தியோகஸ்தருக்கு, விற்பனை விஷயத்தை தகுந்தபடி பிரசித்தப்படுத்துவதற்கு அவசியமென்று அவருக்குத் தோற்றக்கூடிய விதமாகப் பிரசித்தஞ் செய்வித்தபிறகு அவரால நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்திலும் இடத்திலும் பஹிரங்கமாய் எலம் போட்டு ஷை சொத்தை விற்பனைசெய்ய அதிகாரமும் கொடுக்கலாம். ஆனால், ஜப்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து எழு தினங்களுக்குள்ளாக அப்படிப்பட்ட விற்பனை நடக்கக்கூடாது.

4. பிரதேச கவர்ன்மெண்டார் - குறித்த யாதொரு விஸ்தீர்ணத்தில் பிரதான ஆக்டின் 37-A பிரிவில் கண்ட நிபந்தனைகள் அந்த விஸ்தீர்ணத்தில் நடக்கும் நிலவிற்பனைக்குப் பிரயோகப்படத்தக்கதாயிருப்பது நின்றுபோகுமென்று விளம்பரம் பிரசுரிக்கலாம்; அந்தப்படி விளம்பரம் பிரசுரிக்கப்படுவதன்மேல், ஷை நிபந்தனைகள் - அப்படிப்பட்ட விற்பனைக்குப் பிரயோகப்படுவது நின்றுபோவதுமல்லாமல், 38-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட "37-A பிரிவின்படியாவது இந்தப் பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட பகுதியின்படியாவது" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "இந்தப் பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட பகுதியின்படி" என்னும் வார்த்தைகள் அமைத்துக்கொள்ளப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே ஷை (3) குறிப்பிட்ட பகுதியை வாசிக்கவும் வேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

சில பிரதேசங்களில் ரயத்துகள் ஒன்றுகச்சேர்ந்து வரி வசூல் விஷயத்தில் சாத்வீகமாய் எதிர்க்கிற பட்சத்திலே அவர்கள் வரி செலுத்தாமல் தப்பித்துக்கொள்ளக்கூடுமென்னும் எண்ணம் உண்டாயிருக்கிறது. இந்த நிலைமையை கவனிக்கையில், அசையும் பொருள்களை ஜப்தி செய்வதற்கும் அல்லது நிலத்தை ஜப்தி செய்வதற்கும் அவைகளைப் பிறகு விற்பனை செய்வதற்கும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை முறைப்படி அனுவசியமாய் அதிக காலம் பிடிக்கிறது.

ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த ஆக்ட் இப்போதிருக்கிறபடி அதில் கண்ட நிபந்தனைகள் சகஜமான நிலைமைகளை உத்தேசித்து எற்படுத்தப்பட்டவைகளாகும். ஆகவே, அவை - தீர்வை வசூல் விஷயத்தில் ஒன்றுய்ச்சேர்ந்து எதிர்க்க முயற்சி செய்யப்படும்போது அதைத் தடுப்பதற்குப் போதுமானவைகளாயில்லை.

ஜப்தி செய்தபிறகு செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு எவ்வளவு குறைந்த கால அளவை நிர்ணயிக்கலாமோ அவ்வளவு குறைந்த கால அளவை மாத்திரமே நிர்ணயித்து, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அதற்குப் பிறகு உடனே சொத்தை விற்பனை செய்வதற்கு அதிகாரம் எற்படும்படியாக நடவடிக்கை முறையைச் சுருக்கமாக்க உத்தேசிக்கலாயிற்று.

மஹமத் ஹபிபுல்லா.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
(லா) லெஜிஸ்லெடிவ் டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.